## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

இலங்கை கணக்கீட்டு நியமம் 18 க்கமைய, ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறான முன்கொண்டு செல்லப்படும் வாகனப் பெறுமதிக்கும் அவற்றின் நியாயமான பெறுமதிக்குமிடையே போதியளவு வேறுபாடுகள் கிடையாது என்பதை உறுதிசெய்யுமுகமாக வாகனங்னளைச் சபை மீளமதிப்பீடு செய்யவில்லை.

### 1.2.2 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு ஆண்டுகளைக் கடந்துவிட்ட போதும் தீர்த்து வைக்கப்படாதிருந்த கொடுப்பனவு செய்யவேண்டிய நிலுவை மீதி ரூபா 966,184 ஆகும்.

(ஆ) சபையின் உத்தியோகத்தர்களுக்குத் தீர்த்து வைக்கப்பட வேண்டிய ஓராண்டுக்கு மேற்பட்ட ரூபா 50,953 மீதியானது மீளாய்வாண்டு முடிவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

(இ) விசேட கடனாகிய ரூபா 50,681 விழா முற்பணமாகிய ரூபா 10,600 விழா முற்பணக் கடனாகிய ரூபா 7,700 விசேட முற்பணக் கடனாகிய ரூபா 22,000 வாகனக் கடனாகிய ரூபா 399,282 மற்றும் இடுக்கண்கடனாகிய ரூபா 449,486 எனும் மீதிகளது கூட்டுத்தொகையாகிய ரூபா 939,749 கடன்பட்டோரிடமிருந்தோ

அல்லது தொடர்புடைய பிணையாளர்களிடமிருந்தோ அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) SMIB வீடமைப்புக் கடன்திட்டத்தின் கீழ் 2011 ஜனவரி 01 இல் உள்ளவாறு வழங்கியிருந்த ரூபா 214,264 கூட்டுத்தொகையுடைய கடன்மீதி தொடர்பாக மீளாய்வாண்டில் தவணைப்பணம் எதுவும் பெறப்படவில்லை.

(உ) பொறுப்புகளின் கீழ் காட்டப்படும் கோரப்படாத மரண நலன்புரிக் கணக்கில் ரூபா 7,017,309 மீதியானது 1995 ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்தும் திருப்பிச் செலுத்தும் நலன்புரிக் கணக்கில் ரூபா 11,749,478 மீதியும் 2011 தொடக்கம் மீளாய்வாண்டு இறுதிவரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்த போதிலும் அம் மீதியைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஊ) 2001 ஆம் ஆண்டு தொடக்கம் அதிகரித்தவாறிருந்த திருப்பிச் செலுத்தும் நலன்புரிக் கணக்கின் ரூபா 4,575,055 மீதியை மீளாய்வாண்டு முடிவிலும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(எ) சேவையிலிருந்து நீங்கி 1 முதல் 12 ஆண்டு காலம் முடிவுற்றிருந்த 22 உத்தியோகத்தர்களிடமிருந்து மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 385,290 தொகையானது 2011 டிசெம்பர் 31 ஆந் திகதியன்றும் அறவிடப்படாதிருந்தது.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

சான்றுகள் இல்லாது சில்லறைக் காசுக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட 180 கொடுப்பனவு உறுதிச்சான்றுகளது பெறுமதி ரூபா 238,974 ஆகும்.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1999 ஒக்டோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரிவுகள் 1.1.6, 2.3 என்பன | இப்பிரிவுகளுக்கு முரணாக நிறுவன உத்தியோகத்தர்களது தனிப்பட்ட பயணங்களுக்குச் சபை மீளாய்வாண்டின் போது எரிபொருளுக்குச் செலவழித்த தொகை ரூபா 2,317,396 ஆகும். |
| (ஆ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2008 ஜுலை 28 ஆந் திகதிய 50 ஆம் இலக்கச் சுற்றறிக்கை 01 ஆம் பந்தி | சுற்றறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் படியிலும் கூடுதலாக 3 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின்போது எரிபொருளுக்குச் செலவழித்த தொகை ரூபா 871,242 ஆகும். |
| (இ) பொது முயற்சிகள் மற்றும் பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் | |
| பொது முயற்சிகள் திணைக்களத்தின் 1998 மார்ச் 18 ஆந் திகதிய 130 ஆம் இலக்க சுற்றறிக்கை, 1997 நவெம்பர் 19 ஆந் திகதிய 26/47 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் பொது முயற்சிகள் தொடர்பான 2011 ஒக்டோபர் 18 ஆந் திகதி இடம்பெற்ற 56 ஆம் தொழிற்படு குழுவினது கூட்டக் குறிப்பின் 19 ஆம் பிரிவு என்பன | 4.2% ஊழியர் கடன் வட்டி வீதத்தின் அடிப்படையில் கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்ட சபையானது ஊழியர்களுக்கு கடன் வழங்கப்படலாகாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளபோதும், அதற்கு முரணாகச் செயற்பட்ட சபை மேற்படி வட்டி வீதத்திலும் அதற்குக் குறைவான வட்டி வீதத்திலும் ஊழியர் கடன்களை வழங்கியிருந்தது. 2011 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் மேற்படி வட்டி வீதத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த ரூபா 338,938,974 கடன் மீதி அறவிடப்பட வேண்டியிருந்தது. |
| (ஈ) 2003 ஜுன் 06 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |

| | | |
|---|---|---|
| | (i) பிரிவு 8.3.8 | அமைச்சரவையின் முன்கூட்டிய அங்கீகாரமின்றி ரூபா 853,440 க்கான நன்கொடை வழங்கப்பட்டிருந்தது. |
| | (ii) பிரிவு 8.7 | உத்தியோகத்தர்களது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு வருமானத்தின் அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய வரி சேவை வழங்குநரால் செலுத்தப்படலாகாதெனினும், ஆண்டின்போது உழைக்கும்போதே செலுத்தும் வரியாக ரூபா 3,429,042 சபையினால் வழங்கப்பட்டிருந்தது. |
| | (iii) பிரிவு 9.12 | சபை அறிமுகஞ் செய்து வைத்த நலன்புரி நிகழ்ச்சித்திட்டத்திற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும், அவ்வாறான அங்கீகாரம் பெறப்படாத நலன்புரிச் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 18,353,944 செலவிடப்பட்டிருந்தது. |
| (உ) | 2000 ஜனவரி 11 ஆந் திகதிய பீஎப்/பீஈ 5 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2011 ஒக்டோபர் 18 ஆந் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் 56 ஆம் இலக்க கூட்டக் குறிப்பின் 16 ஆம் பிரிவு | பொதுத் திறைசேரியினது அங்கீகாரமின்றி, மீளாய்வாண்டின்போது ரூபா 74,845,611 ஊக்குவிப்புப் படியாக வழங்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2011 டிசெம்பர் 22 ஆந் திகதிய 47 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைச் சுற்றறிக்கை | இச்சுற்றறிக்கையின் 1 ஆம் மற்றும் 2 ஆம் பிரிவுகளுக்கு முரணாக, மீளாய்வாண்டின் போது ரூபா 44,482,478 மிகையூதியமாக வழங்கப்பட்டிருந்தது. 8 ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அப்பால் மிகையூதியம் வழங்கப்படுவதாயின் அமைச்சரவையின் முன்கூட்டிய அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும், சபை |

| | | |
|---|---|---|
| | | அதற்கமைய நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (எ) | 2010 செப்டம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இணைப்பு II (6) ஆம் பந்தி | சம்பள ஏற்றத்தினது நிதிசார் பெறுமதி குறைவு மாற்றத்தைச் சீராக்கல் செய்து எதிர்காலத்தில் வழங்குவதற்குப் பதிலாக, பழைய சம்பளத் திட்டத்தின கீழ் சம்பள ஏற்றம் பெறப்பட்ட காலப்பகுதிக்கும் அக் குறைவைக் கருத்திற்கொண்டு கடந்த காலத்தில் தாக்கம் ஏற்படும் விதத்தில் சம்பள ஏற்றத்திற்கான சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2012 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் இது நிவர்த்தி செய்யப்படவில்லை. |
| (ஏ) | 2005 ஜுலை 25 ஆந் திகதிய 2005/12 ஆம் இலக்க நிர்வாக மற்றும் மனிதவளப் பிரிவுச் சுற்றறிக்கை பிரிவு 03 பந்தி XIV | முன்னர் பெற்ற கடன் தொகையை முற்றாகச் செலுத்தாதிருப்பின் அக்கடன் மீதியைக் கழித்து எஞ்சி வரும் தொகையை வழங்கலாம். எனினும், அதற்கு முரணாகச் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (ஐ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் (நி.பி) | |
| | (i) நி.பி 104 | நாற்பத்தைந்து வாகன விபத்துக்கள் தொடர்பான இழப்பு தொடர்பான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| | (ii) நி.பி 756(1) | ஐந்தொகையின் நிலையான சொத்துப் பெறுமதியுடன் இணங்கும் விதத்தில் முறையான பொருட் கணிப்பு இடம்பெற வில்லை. |

### 1.2.5 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 1999 தொடக்கம் அமுலாக்கப்படும் நிதிசார் நடவடிக்கைக் கோவைக்கு மீளாய்வாண்டு முடிவுவரை நிதி அமைச்சினதோ அல்லது திறைசேரியினதோ அங்கீகாரம் பெறப்படவில்லை.

(ஆ) பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி சபை உத்தியோகத்தர்களுக்கு 1993 தொடக்கம் சீருடை வழங்கப்பட்டிருந்தது. இதன்பொருட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 8,709,039 செலவிடப்பட்டிருந்தது.

(இ) சனிக்கிழமைகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மேலதிக நேர வேலைக்கு ஒரு மணித்தியாலத்திற்கு ஒன்றரை மணித்தியாலப் படி மற்றும் அத்தினங்களில் 8 மணித்தியாலங்கள் முடிவுற்றதும் நாட் சம்பளத்தையும் கூட்டி அங்கீகாரமோ அல்லது அடிப்படை எதுவுமோ இன்றி வழங்கப்பட்ட மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு மேலதிக நேர வேலைக் கொடுப்பனவிற்கான ரூபா 14,092,107 இல் உள்ளடங்கியிருந்தது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாட்டினால் விளைந்த மிகை ரூபா 11,570,693,989 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 14,588,421,261 ஆகும். இதற்கமைய முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டு மிகையில் ஏற்பட்ட குறைவு ரூபா 3,017,727,272 ஆகும். 2011 ஆம் ஆண்டில் முதலீடுகளுக்குப் பெறப்பட்ட முதலீட்டு வருமானம் மற்றும் மூலதனப் பங்கு விற்பனையால் ஏற்பட்ட மூலதன இலாபக் குறைவுடன் நிர்வாக செலவினம் அதிகரித்தமையும் இம்மிகையில் ஏற்பட்ட குறைவுக்குக் காணரமாயிற்று.

## 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் சபையின் மிகை குறைவடைவதன் காரணமாக அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் பங்கிலாப சதவீதம் 2.5 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) நிதியத்தில் அங்கத்தவர்களது உரிமையாண்மை, மொத்த பங்களிப்பு மற்றும் பிரேரிக்கப்பட்ட வட்டி என்பவற்றின் திரண்ட பெறுமதியினது 5 ஆண்டின் போதிலான வேறுபாடுகள்

கடந்த 5 ஆண்டுகளின்போது சபை அங்கத்தவர்களது முழு உரிமையாண்மை மற்றும் அந்த உரிமையாண்மைக்குரிய மொத்த பங்களிப்பு மற்றும் திரண்ட வட்டி என வேறுபடுத்தப்பட்ட விதம் கீழே காணப்படுகின்றது.

| ஆண்டு | மொத்த பங்களிப்பு | திரண்ட வட்டி | அங்கத்தவர்களது உரிமையாண்மை |
|---|---|---|---|
| 2007 | 36,798.97 | 39,134.10 | 75,933.07 |
| 2008 | 40,712.25 | 48,157.80 | 88,870.05 |
| 2009 | 43,875.10 | 59,181.98 | 103,057.08 |
| 2010 | 48,148.28 | 71,704.59 | 119,852.87 |
| 2011 | 51,464.77 | 84,021.53 | 135,486.30 |

மேற்படி தகவல்களின் பிரகாரம், 2011 ஆம் ஆண்டளவில் சபை அங்கத்தவர்களது முழுச் சொத்துரிமையில் 38% உதவு தொகையாக இருந்ததுடன் 62% திரண்ட வட்டியாகவும் இருந்தது. அவ்வாறே 2010 க்கு ஒப்பாக 2011 ஆம் ஆண்டில் அங்கத்தவர்களது முழுச் சொத்துரிமையும் 13% அதிகரித்தபோதும் அவ்வாண்டில் மொத்த உதவு தொகையும் 6.9% மாத்திரமே அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திறன்

### 3.1.1 செயற்பாட்டு வினைத்திறன்

2011 ஆம் ஆண்டு முடிவில் செயற்திறனது நிலைமை பின்வருமாறு.

| விபரம் | உள்ளபடியான எண்ணிக்கை | நிதிய நடவடிக்கைகளுடன் தொடர்புடைய எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| தனியார் மற்றும் அரசு சார்ந்த துறையின் ஊழியர்கள் | 3,414,944 | 2,100,000 | 61.49% |
| சேவை வழங்குநர் | 228,926 | 67.041 | 29.28% |
| நிதிய அங்கத்தவர் கணக்குகளது எண்ணிக்கை (மில்லியன்) | 9.6 | 2.1 | 21.87% |

2011 ஆம் ஆண்டு முடிவில் இலங்கையில் சேவையில் ஈடுபட்டுள்ளோரில் சுயதொழிலில் ஈடுபட்டுள்ள 2,478,716 நபர்களை நிதியத்தில் இணைத்து சலுகைகள் வழங்குவதற்குப் போதிய வேலைத்திட்டம் எதுவும் சபையால் தயாரிக்கப்பபட்டிருக்கவில்லை.
(மூலம் - இலங்கை மத்திய வங்கி 2011)

### 3.1.2 முதலீடுகலும் முதலீட்டு வருமானமும்

மீளாய்வாண்டின் ஆரம்ப தினத்தில் ரூபா 118,984 மில்லியனாக இருந்த முதலீடுகள், கொள்வனவுகள் மற்றும் முதிர்வடைதல் என்பவற்றிற்கான சீராக்கல்களின் பின்னர் ஆண்டின் இறுதி மீதி ரூபா 134,991 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) குறுகியகால ரிபோ முதலீடு**

குறிப்பிட்டதொரு வங்கியால் சபைக்கு வழங்கப்பட்ட சேவைக்காக சபை வங்கிக் கட்டணத்தைச் செலுத்தியிருந்தபோதும், 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இருசாராரதும் இணக்கப்பாட்டுடன் சந்தையில் நிலவும் வட்டி வீதத்துக்கும் குறைவான வட்டி வீதத்தில் குறித்த வங்கியில் ரூபா 500,000,000 வைப்பிலிடப்பட்டிருந்தது. சந்தையில் நிலவும் வட்டி வீதம் ஏறக்குறைய 10% ஆகவிருக்கலாம் எனக் கற்பனை செய்யுமிடத்து, அம் முதலீட்டால் சபை இழப்புக்குள்ளான வட்டிவருமானம் ஏறக்குறைய ரூபா 11,934,162 ஆகும்.

**(ஆ) பங்கு முதலீடுகள்**

(i) மீளாய்வாண்டில் 10 கம்பனிகளில் முதலீடு செய்திருந்த ரூபா 138,403,316 மூலம் எதுவித வருமானத்தையும் பெற முடியாது போயிற்று. இவ்வாறு எதுவித முதலீட்டு வருமானத்தையும் பெறாது ரூபா 82,504,091 முதலீடு செய்த வேறு 3 கம்பனிகளில் மீளாய்வாண்டில் மீண்டும் ரூபா 29,356,835 முதலீட்டை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii) 624,570 பங்குகளில் ரூபா 25,227,538 முதலீடு செய்யப்பட்ட 2 கம்பனிகள் கலைப்பிற்கு உள்ளாகியிருந்தன. 178,700 பங்குகளில் ரூபா 4,066,314 முதலீடு செய்யப்பட்ட கம்பனி ஒன்று நிரலிடப்பட்ட கம்பனி நிரலிருந்து நீக்கப்பட்டமையால் அக்கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்ட தொகையையோ முதலீட்டு இலாபத்தையோ சபையால் பெறமுடியாதிருந்தது.

(iii) முதலீட்டுச் சந்தையில் 2 முதல் 5 ஆண்டுகளாகக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளாதிருந்த 5 கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்ட தொகை ரூபா 152,478,563 ஆகும். இதில் உள்ளடக்கிய இலங்கை டெலிகொம் கம்பனியின் பங்குகள் அங்கீகாரமின்றி விற்பனை செய்யப்படலாகாது எனப் பொதுத் திறைசேரி அறிவுரை வழங்கியுள்ளதாகத் தலைவர் வழங்கிய பதிலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(iv) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் பங்குகளையும் கூறுகளையும் விற்பனை செய்து பெற்ற மூலதன இலாபம் ரூபா 654,779,335 ஆல் குறைவடைந்திருந்தது. அக்குறைவானது 54% ஆகும். 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் பங்குச்சந்தை துரித

பின்னடைவை எதிர்கொண்டதாகவும் எதிர்காலத்தில் பங்குகளின் விலை அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் கூடிய மூலதன இலாபத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சபையின் தலைவரது பதிலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(v) ரூபா 7,228,104,571 முதலீடு செய்யப்பட்ட 105 நிறுவனங்களில் 63 நிறுவனங்களது பங்குச்சந்தைப் பெறுமதி குறைவடைவதால் ஏற்படக்கூடிய நட்டம் தொடர்பான நிச்சயமின்மையைக் கருத்திற்கொண்டு மீளாய்வாண்டில் ரூபா 911,992,269 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(vi) இரண்டு கம்பனிகளில் முலீடு செய்யப்பட்ட தொகுதிக்கடன் மற்றும் வாக்குறுதிப் உத்தரவாதப் பத்திரங்கள் தொடர்பாக 9 ஆண்டுகளுக்கு முன்பிருந்து பெறப்படவேண்டிய முதலீடு வட்டி ரூபா 27,854,580 ஆகும். இதனை அறவிடுவதற்கு 2011 டிசெம்பர் 31 ஆந் திகதியவிலும் சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேவைகளை இனங்கண்டு மதிப்பீட்டைத் தயாரிக்காது முற்பணம் வழங்கப்பட்டமையால் சபையின் உத்தியோகத்தர்கள் ஆண்டின்போது ரூபா 384,306 ஐ குறுகிய காலத்திற்குத் தம்மிடமே வைத்திருப்பதற்கான வாய்ப்புக்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு தொடக்கம் சபை நிலையான சொத்துப் பதிவேட்டைப் பேணிவந்தது. எனினும், அதன் மூலம் ஆண்டிற்கான குறித்த தேய்மானப் பெறுமதியான ரூபா 26,210,160 ஒவ்வொரு பொருளுக்கிடையேயும் எவ்வாறு பகிர்வுக்குள்ளானது என்பதை வெவ்வேறாகத் தெளிவாக இனங்காண முடியவில்லை.

(இ) ரூபா 6,043,707 பெறுமதியான நிலையான சொத்துக்களைக் கைதவிர்ப்புச் செய்கையில், அப் பொருட்கள் அரச விலை மதிப்பீட்டாளரால் விலை மதிப்பிடப்பட்டிருப்பின் அதன் பொருட்டுப் பெறப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட ரூபா 2,665,709 இலபத்திலும் கூடிய இலாபத்தை ஈட்டியிருக்கலாம் என அவதானிக்கப்பட்டது.

### 3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

குறிப்பிடப்பட்ட கம்பனி ஒன்றிடமிருந்து சபை பெறவேண்டிய வைப்பாகக் கணக்குகளில் காட்டப்படும் ரூபா 21,900,000 சபையால் உடன்படிக்கை மீறப்பட்டதையடுத்து நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றின்மூலம் குறித்த கம்பனிக்குக் கொடுப்பனவு செய்த தொகையின் பொருட்டு வழங்கப்பட்ட மேன்முறையீட்டினது விளைவாக அக்கம்பனியால் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வங்கிப் பிணைமுறியின் பெறுமதி ஆகும். இந்நடவடிக்கையுடன் தொடர்புடைய மேன்முறையீடு சம்பந்தமாக மீளாய்வாண்டின்போது சபை இறுதி முடிவை மேற்கொள்ளவில்லை.

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை உத்தியோகத்தர்களது பாவனைக்காக 2011 மற்றும் அதற்கு முன்னரான ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படாது இடுக்கும் எஞ்சிய சீருடைகளது பெறுமதி ரூபா 1,943,500 ஆகும். சீருடைக்கான தேவை தொடர்பாக சரியான தரவுகளைச் சேகரிக்காது மிகை இருப்பு கொள்வனவு செய்யப்பட்டமையால் இவ்வாறு பயனற்ற செலவினத்திற்குள்ளாகியமை புலனாகியது.

(ஆ) குறைந்த ஆகுசெலவுடன் கூடிய நலனைப் பெறும் விதத்தில் சிறந்த திட்டம் மற்றும் ஆய்வுகள் எதுவுமின்றி நடவடிக்கைகளை மேற்கொண்டமையால் 2010 ஆம் ஆண்டில் உயர்தர வகுப்பில் சித்தி பெற்ற மாணாக்கர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவது தொடர்பான புதினப் பத்திரிகை அறிவித்தல் கட்டணமாக ரூபா 1,078,515 செலவழிக்கப்பட்டிருந்தது.

(இ) ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் சித்திபெற்ற மாணாக்கர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்கான விழாவிற்கு ஏற்பட்ட செலவினம் ரூபா 1,656,643 ஆகும்.

### 3.5 இனங்காணப்பட்ட இழப்புகள்

வலய அலுவலகமொன்றில் ஏற்பட்ட சில்லறைக் காசுக் குறைவாகிய ரூபா 11,412 தொகையினை அதற்குப் பொறுப்பான நபரிடமிருந்து அறவிடப்படுவதற்குப் பதிலாக சபையினது இலாபத்தில் பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்தது. சபையின் வாகனக்

குழாமிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 103,484 அறவிடப்படமுடியாது போனமையால் அத்தொகையும் புத்தகத்திலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

**3.6 பிறஅரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்**

2003 ஜுன் 6 ஆந் திகதிய பீஈ/டீ12 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவு மற்றும் நி.பி 502(2)(II) ஆம் பின்னிணைப்பின் 9 ஆம் பட்டோலைக்கு முரணாக, சபைக்குச் சொந்தமான ரூபா 6,189,922 பெறுமதியுடைய பீபீ 1089 ஆம் இலக்க கெப் வண்டி சனாதிபதி செயலகத்திற்கு முறையாக ஒப்படைக்கப்படாது வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அவ்வாகனத்தைப் பழுதுபார்ப்பதற்கும் அதற்கான சேவைகளுக்கென சபை செலவழித்த தொகை ரூபா 646,868 ஆகும்.

**3.7 ஊழியர் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு தொடர்பாக நிதியம் ஒன்றை நிறுவுதல்**

மீளாய்வாண்டு முடிவிலான ஊழியர் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு ரூபா 179,895,381 ஆகும். இதனைப் பிறிதொரு நிதியமாக முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**3.8 வாகனப் பாவனை**

மீளாய்வாண்டின்போது சபையின் 16 வாகனங்கள் விபத்திற்குள்ளாகியமையால் ஏற்பட்ட இழப்பு ரூபா 606,134 ஆகும். இதனைக் காப்புறுதி வாயிலாகவோ அதற்குப் பொறுப்பானவர்களிடமிருந்தோ அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**4. கணக்களிதன்மையும் சிறந்த நிர்வாகமும்**

**4.1 யாக்கத்திட்டம்**

யாக்கத் திட்டம் 2009-2012 காலப்பகுதிக்குரியதாக இருந்தது. 2011 ஒக்டோபர் மாதமளவில் யாக்கத்திட்டம் நாளதுவரையாக்கப்படாதிருந்தது.

**4.2 செயல்திட்டம்**

2009-2012 யாக்கத்திட்டத்துடன் செயல்திட்டத்தையும் சமர்ப்பித்திருந்ததுடன் 2011 முடிவுரை வருடாந்த செயல் திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்தது.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

2009 ஜுன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவு, நி.பி 133(2) நி.பி134(3) என்பவற்றின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கடமைகள் நிறைவேறாததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமைஅதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாது இருந்தன.

### 4.4 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டின்போது சபை கொள்வனவுத் திட்டம் ஒன்றைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீதான குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) அறவிடப்பட வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய தொகை
(இ) காலத்துக்கேற்ப அதிகாரச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள்
(ஈ) முதலீடு